**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை: திருமதி.எஸ்.சப்னா,B.B.M.,L.L.M.,**
**நீதித்துறை நடுவர், பல்லடம்**
**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08 ஆம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 25 ஆம் நாள்**
**<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 18/2019</u>**
**CNR No.TNTI11 000068 2019**

அரசுக்காக:
காவல் ஆய்வாளர்,
பல்லடம், காவல் நிலையம்
(குற்ற எண்.1011/2017) ... புகார்தாரர்

– எதிர் –

சுரேஷ் (வயது 38),
த/பெ. சந்திரன்,
1/38 ஏ,தாம்அட்டி, அதுகரட்டி,
குன்னூர், நீலகிரி மாவட்டம்.
**<u>தற்போதைய முகவரி</u>**
ஆனந்தம்மை நகர்,
வீரபாண்டி பிரிவு,
மேட்டுபாளையம் ரோடு,
கோயம்புத்தூர். ..... எதிரி

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.18/2019**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1 (P.Dis.No.36/2021)படியும் விதி 106 Criminal Rules of Practice –2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |
| | | Suresh | 01.12.2017 | 01.12.2017 |
| (ii) | Date of filling of the complaint/ final report in the court | Filling of Complaint | Filing of Final report | |
| | | Complaint Statement on 30.11.2017 | பல்லடம் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் 24.01.2019 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டது. | |
| (iii) | Date of Committal of the case to the court of Sessions | Not applicable | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | Date of Questioning of the accused under section 279, 304(A)of IPC as the case may be | 29.06.2022 | | |
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | MP 2/2026 | 28.01.2026 | Allowed |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1- Alexandar | 27.01.2026 | 27.01.2026 |
| | | PW2- John Pal | 27.01.2026 | 27.01.2026 |
| | | PW3- Babu Ranjith | 27.01.2026 | 27.01.2026 |
| | | PW4- Myilsamy | 28.01.2026 | 28.01.2026 |
| | | PW5-Amburose | 17.02.2026 | 17.02.2026 |
| | | PW6-Suburathinam | 09.03.2026 | 09.03.2026 |
| (vii) | Date of Examination of the accused under section 313 of the Code | | | 12.03.2026 |
| (viii) | Details of abscond of an accused and his appearance/production, as the case may be | | | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | | | Nil |

இந்த வழக்கானது கடந்த 24.01.2019–ஆம் தேதி CC.No.18/2019–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.S.செந்தில் குமார் அவர்களும், எதிரிக்காக எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.மகேஷ், அவர்கள் முன்னிலையாகியும் கடந்த 12.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப் பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1)கடந்த 29.11.2017 ம் தேதி மாலை 19.15 மணிக்கு பல்லடம் பகுதிக்குட்பட்ட பல்லடம்–செட்டிபாளையம் ரோடு அன்னை வேளாங்கண்ணி சர்ச் அருகில் எதிரி TN 33 N 2587 என்ற எண்ணுள்ள அரசு பேருந்தை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ரோட்டை கடக்க நடந்து சென்ற அந்தோணி என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும், மேற்படி விபத்தில் அந்தோணிக்கு தலை, இடது தோள்பட்டை, இடது கை மணிகட்டு, இடது பக்க இடுப்பு, இடது கணுக்கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துள்ளதாக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279,

304(A)இதசவின் கீழ் பல்லடம், காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2)எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட்டது.

**<u>குற்றத்தின் சாராம்சத்தையும் குற்றத்தினையும் விவரித்தல்:</u>**

3)எதிரிக்கு போதியகால அவகாசம் கொடுக்கப்பட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279,304(A)இதசவின் கீழான குற்றம் பற்றி, விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றங்களை மறுத்து கூறி சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டினார். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4)அதன்படி, அரசுதரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 13 வரை பட்டியலிடப் பட்டு, எதிரி மீதான குற்றத்தினை நிரூபிக்கும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப் பட்டு அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**<u>5) அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கானது, நீலகிரி மாவட்டம், பந்தலூர் தாலுக்கா, நெல்லியாளம், என்ற முகவரியில் வசித்து வரும் அலெக்சாண்டர் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தொடரப் பட்டுள்ளது. அவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.1 புகார் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அவரது புகாரில் தான் மேற்கண்ட முகவரியில் பெற்றோருடன் குடியிருந்து கொண்டு விவசாய கூலி வேலை செய்து வருவதாகவும் அவரது அப்பா அந்தோணி கார்பெண்டர் வேலை செய்து வருவதாகவும் அவருக்கு ஜான்டேவிட் ஸ்டீபன் என்ற தம்பிகளும், மெர்சி என்ற தங்கையும் உள்ளதாகவும் அவரது அப்பாவின் பெயர் ஏசையன் என்றும் அவரது அப்பாவிற்கு 55 வயதாகிறது என்றும் அவரது அப்பாவுடன் பிறந்த அண்ணன் ஆம்புரோஸ் மற்றும் தங்கை ஆகியோர் பல்லடம் பக்கத்தில் இருப்பதால் அ.சா.1 ன் அப்பா கடந்த 4

மாதங்களாக பல்லடம் கொசவம்பாளையம் ரோட்டில் உள்ள கண்ணப்பன் காம்பவுண்டில் குடியிருந்து கொண்டு கார்பெண்டராக வேலை செய்து வருவதாகவும் அ.சா.1 ம் அவரது அம்மா திரேசியா, தம்பி தங்கை ஆகியோர் சொந்த ஊரில் குடியிருந்து வருவதாகவும் கடந்த 29.11.2017 ம் தேதி இரவு 81/2 மணி சுமாருக்கு அ.சா.1 வீட்டில் இருந்தபோது பல்லடத்தில் இருக்கும் அவரது அத்தை மகன் ஜான்பால் அவரது அம்மாவிற்கு போன் செய்து கடந்த 29.11.2017 ம் தேதி இரவு 71/2 மணி சுமாருக்கு ஜான்பால் அ.சா.1 பெரியப்பா அம்புரோஸ் ஆகியோர் பல்லடம் செட்டிபாளையம் ரோட்டில் உள்ள அன்னை வேளாங்கண்ணி சர்ச்சுக்கு செல்ல பல்லடம் – செட்டிபாளையம் ரோட்டில் ரோட்டை கடக்க வேண்டி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்றபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி 30 நம்பர் டவுன் பஸ் TN 33 N 2587 ஐ அதன் டிரைவர் கவனக்குறைவாகவும், ஆரான் அடிக்காமலும் வேகமாகவும் ஓட்டி வந்து ரோட்டில் நடந்து சென்ற அவரது அப்பா மீது மோதியதில் தலையில் அடிபட்டு மயக்கமானவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் ஜிஎச்க்கு இரவு 7 ¾ மணி சுமாருக்கு கொண்டு சென்றபோது அங்கிருந்த டாக்டர் அவரது அப்பாவை பார்த்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள் அவரது அப்பாவின் பிரேதம் பல்லடம் ஜிஎச் ல் உள்ளதாக தகவல் சொல்ல அ.சா.1 ம் அவரது உறவினர்களும் புறப்பட்டு சென்று கடந்த 30.11.2017 ம் தேதி காலையில் பல்லடம் ஜிஎச்ல் இருந்த அவரது அப்பாவின் பிரேதத்தை பார்க்க தலை மற்றும் உடலில் காயம் ஏற்பட்டு இறந்து கிடந்தார் அவரது அப்பா மீது மோதிய அரசு பஸ் TN 33 N 2587 ஐ ஓட்டி வந்தவரை பற்றி விசாரிக்க குன்னூரை சேர்ந்த சந்திரன் மகன் சுரேஷ் என்று சொன்னார்கள் இதுசம்மந்தமாக தக்க நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது.

6)இவ்வழக்கின் இறந்துபோன அந்தோணியின் பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியாக அ.சா.2 ஜான்பால் மற்றும் அ.சா.5 அம்புரோஸ் என்பவரும் பார்வை மகசர் சாட்சியாக அ.சா.3 பாபு ரஞ்சித் என்பவரும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

7)இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.4 மயில்சாமி , உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 30.11.2017 ம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவிஆய்வாளராக நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது காலை 8.15 மணிக்குள நீலகிரி மாவட்டம் பந்தலூர் நெல்லியாளம் உப்பட்டியை

சேர்ந்த ஆண்டனி மகன் அலெக்ஸாண்டர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் பல்லடம் காவல்நிலைய குற்ற எண்.1011/2017 சட்டப்பிரிவுகள் 279,304(A) இதசவின் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் அசல் முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரினை இணைத்து நீதிமன்ற நடுவருக்கு அனுப்பி வைத்ததாகவும் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாக கூறியுள்ளார்.

8)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 சுப்புரத்தினம், காவல் ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 30.11.2017 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 1011/2017 சட்ட பிரிவுகள் 279,304(A) இதசவில் சிறப்பு உதவி ஆய்வாளர் மயில்சாமி பதிவு செய்து புலன் விசாரணைக்காக பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 30.11.2017 ஆம் தேதி காலை 9.15 மணிக்கு சாட்சி பாபு ரஞ்சித் மற்றும் கருப்புசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி தயார் செய்ததாகவும் பின்னர் பல்லடம் அரசு மருத்துவமனை சென்று காலை 10.30 மணிக்கு வழக்கில் இறந்து போன அந்ததோனி என்பவர் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்பு அ.சா.ஆ.5 பிரேத விசாரனை செய்து அறிக்கை தயார் செய்ததாகவும் பிரேதத்தினை இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தினை காவலர் 1354 கோபிநாத் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்ததாகவும் பின்னர்அலெக்சான்டர், ஜான்பால், ஆம்பேராஸ், சேவியர், ஜோன், பாபு ரஞ்சித் மற்றும் கருப்புசாமி ஆகியோரை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் 01.12.2017 ஆம் தேதி நிலையம் ஆஜரான எதிரி சுரேஷ் என்பவர் கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்ததாகவும் வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களான TN33 N 2587 என்ற அரசு பேருந்தை மோட்டார வாகன ஆய்வாளருக்கு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தியதாகவும் அன்றைய தினம் சாட்சி ஸ்ரீனிவாசன் அவர்களை விசாரித்து ஓட்டுநர் பணி அமர்த்தும் கடிதம் மற்றும் டிரிப் சீட் பெற்று வாக்கு மூலம் பதிவு செய்ததாகவும் அந்த ஓட்டுநர் பணி அமர்த்தல் கடிதம் மற்றும் டிரிப் சீட் முறையே அ.த.சா.ஆ.6 மற்றும் 7 என்றும் பின்னர்

24.02.2018 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்களை விசாரித்து அ.சா.ஆ.8 மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் வழக்கில் அந்ததோனியின் இறப்பை உறுதி செயத் பல்லடம்அரசு மருத்துவ மனை மருத்தவர் கோபி அவர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்ததாகவும் அவர் வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.9 என்றும் பின்னர் வழக்கில் இறந்துபோன அந்தோனியின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட பல்லடம் அரசு மருத்துவமனை மருத்துவர் தினேஷ் அவர்களை விசாரித்து அ.சா.ஆ.10 பிரேத பரிசோதனை பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இத்துடன் புலன் விசாரனை முடித்து 24.02.2018 ஆம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவு 279, 304(A) இதச கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

<u>9)கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் எதிரியிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில்:</u>

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் வினவிய போது எதிரி சாட்சிகள் அனைத்தையும் பொய் சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரி தரப்பு சாட்சிகள் இல்லை என்று முடிக்கப் பட்டது.

<u>அரசு தரப்பு வாதம்:</u>

10)அ.சா.1 முதல் 3 மற்றும் அ.சா.5 வரையிலான சாட்சியங்கள் மூலம் எதிரி மீதான குற்றம் நிரூபணம் செய்யபப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.4 மற்றும் புலன் விசாரணை செய்த அதிகாரியான அ.சா.6 ன் சாட்சியத்தின் மூலம் அரசுதரப்பு வழக்கு மற்றும் அரசு தரப்பு சான்றாவணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 279,304(A)இதசவின் கீழான குற்றம் நிரூபணம் செய்யபப்பட்டுவிட்டதாகவும், எனவே எதிரிக்கு பிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழான குற்றத்திற்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டும் என்று வாதிட்டார்.

<u>எதிரிதரப்பு வாதம்:</u>

11)இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்

பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 240 ன் கீழ் வினவிய போது, இவ்வழக்கு பொய் வழக்கு என்று கூறி, அரசுத்தரப்பு வழக்கை மறுத்துள்ளார். மேலும், அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அதில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவிய போது, சாட்சிகள் அனைத்தும் பொய் சாட்சிகள் என்று கூறி அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்துள்ளார்.

12)மேலும் எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது வழக்கு விபத்தானது எவ்வாறு யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இவ்வழக்கு சம்பவ விபத்திற்கு சாட்சியத்தின் மூலம் எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்பது அரசு தரப்பில் தகுதிநிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

**தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:**

13)இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது அ.சா.1 அலெக்சாண்டர் அவரது சாட்சியத்தில் கடந்த 30.11.2017 ம் தேதி காலை அத்தை மகன் ஜான்பால் போன் செய்து 29.11.2017 ம் தேதி இரவு செட்டிபாளையம் ரோட்டில் அன்னை வேளாங்கண்ணி சர்சிற்கு செல்ல வேண்டி ரோட்டின் தென்புறத்தில் நின்றுகொண்டிருந்தபோது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் மருத்துவர் அவரை பரிசோதித்து இறந்துவிட்டதாக சொன்னார் அ.சா.1 30 ம் தேதி பல்லடம் அரசு மருத்துவமனை சென்று பார்த்துவிட்டு பல்லடம் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததாகவும் அ.சா.1 ன் அப்பா பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்ததாகவும் இதுசம்மந்தமாக அ.சா.1 ஐ போலீசார் விசாரித்ததாக கூறிவிட்டு அவரது குறுக்குவிசாரணையில் புகாரை அ.சா.1 எழுதவில்லை என்றும் ஏற்கனவே போலீசார் எழுதி வைத்த புகாரில் கையொப்பம்

செய்ததாகவும் அ.சா.1 கையொப்பம் போட்டதற்கு பின்னிட்டு போலீசார் அ.சா.1 ஐ விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.1 ன் சாட்சியத்தின் மூலம் அ.சா.ஆ.1 புகாரின் உண்மைத் தன்மை நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14)இவ்வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சியாகவும், விபத்தில் இறந்துபோன அந்தோணியின் பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியான அ.சா.2 ஜான்பால் அவரது சாட்சியத்தில் கடந்த 29.11.2017 ம் தேதி பல்லடம் செட்டி பாளையம் ரோட்டில் உள்ள அன்னை வேளாங்கண்ணி சர்சிற்கு நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக அ.சா.2 ம் அவரது பெரிய மாமா ஆம்ரோஸ் மற்றும் சின்ன மாமா ஆண்டனி ஆகியோர் நின்று கொண்டிருந்தபோது அவரது சின்ன மாமா ஆண்டனி ரோட்டை கடப்பதற்காக இடதுபுறம் இருந்து வலது புறமாக தெற்கில் இருந்து வடக்கி நோக்கி சென்றபோது ஒரு அரசு பேருந்து வந்து அவர் மீது மோதிவிட்டதில் அவர் கீழே விழுந்துவிட்டதாகவும் அவரது சின்ன மாமாவுக்கு தோள்பட்டை, கால் மற்றும் இடுப்பு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது என்றும் அவரை பொன்னி மருத்துவ மனைக்கு சென்று அங்கிருந்து தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவ மனைக்கு அழைத்து சென்றதாகவும் மருத்துவர் அவரை பரிசோதித்து இறந்து விட்டதாக சொன்னார் உடனே அ.சா.2 அவரது அத்தை மகன் அலெக்சாண்டருக்கு போன் மூலம் தகவல் சொன்னதாகவும் விபத்தை ஏற்படுத்திய அரசு பேருந்து எண். 30 என்றும் விபத்து ஏற்பட்டவுடன் பேருந்து ஓட்டுநர் இறங்கி வந்து பார்த்தார் ஆஜர் எதிரி தான் பேருந்து ஓட்டுநர் என்றும் மறுநாள் போலீசார் மருத்துவ மனையில் வைத்து விசாரித்தார்கள் என்பதாக சாட்சியம் அளித்துள்ளார்.

15) அ.சா.2 அவரது குறுக்குவிசாரணையில் அ.சா.2 ம் அவரது பெரிய மாமா ஆம்ரோஸ் ஆகியோர் நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு அ.சா.2 ம் அவரது பெரிய மாமாவும் சர்ச்சிற்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது அவரது சின்ன மாமா கிளம்பியதாகவும் அப்போது இரவு நேரம் என்பதால் அந்த இடத்தில் தெருவிளக்கு இல்லை என்பதாகவும் ரோட்டை கடந்து சென்ற அவரது சின்ன மாமா ஆண்டனி என்பவர் மீது பேருந்தின் தென்பக்கம் மோதியதாக கூறியுள்ளார்.

16)இவ்வழக்கின் பார்வைமகசர் சாட்சியான அ.சா.3 பாபுரஞ்சித் அவரது சாட்சியத்தில் கடந்த 30.11.2017 ம் தேதி காலை செட்டிபாளையம் ரோட்டில் அண்ணை வேளாங்கண்ணி சர்ச் அருகில் அ.சா.3 ம் அவரது நண்பர் கருப்பசாமியம் நின்று கொண்டிருந்த போது அதற்கு முந்தனநாள் நடந்த விபத்து சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதற்கு சாட்சியாக அ.சா.3 ம் அவருடன் கருப்புசாமியும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் பார்வைமகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப் பட்டுள்ளது. மேலும் அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.2 ஐ அ.சா.3 க்கு 10 வருடங்களாக தெரியும் என்பதாகவும் தான் கையொப்பம் போட்ட தாளில் என்ன விவரம் இருந்தது என்று அ.சா.3 க்கு தெரியும் என்பதாக கூறியுள்ளார்.

17)இவ்வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சியாகவும் விபத்தில் இறந்து போனவரின் பிரேதவிசாரணையின்போது உடனிருந்த சாட்சியான அ.சா.5 ஆம்ரோஸ், அவரது சாட்சியத்தில் கடந்த 29.11.2017 ம் தேதி இரவு 7.15 மணியளவில் செட்டி பாளையம் ரோட்டில் அண்ணை வேளாங்கண்ணி சர்ச்சிற்கு அருகில் அ.சா.5 ம் அவரது தங்கை மகன் ஜான்பால் என்பவரும் நிகழ்ச்சிக்காக வந்து கொண்டிருந்தபோது வழக்கு விபத்தில் இறந்துபோன அந்தோணி போன் செய்து தானும் நிகழ்ச்சிக்காக வந்து கொண்டிருப்பதாகவும் அங்கு காத்திருங்கள் என்று சொன்னார் அ.சா.5 ம் ஜான்பாலும் சர்ச்சிற்கு வெளியில் உள்ள காம்பவுண்டுக்கு அருகில் நின்று கொண்டிருந்தபோது அந்தோணி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி நடந்து வந்து ரோட்டை கடந்து தெற்கு வந்தபோது TN 33 N 2587 என்ற 30 நம்பர் பேருந்து வேகமாக வந்து அவரது தம்பி அந்தோணி மீது மோதி 100 மீட்டர் தூரம் தள்ளி நின்றது அவர்கள் போய் பார்த்தபோது கை, இடுப்பு, தலை ஆகிய இடங்களில் அடிபட்டு இருந்தவரை உடனே பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாகவும் அங்கு மருத்துவர் பரிசோதித்து இறந்து விட்டதாக கூறினார் ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய பேருந்து ஒட்டுநர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

18)மேலும் அ.சா.5 அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.5 நிகழ்ச்சிக்கு சென்று 10 நிமிடங்கள் கழித்து தான் ஜான்பால் வந்ததாகவும் அ.சா.5 ம் ஜான்பால்

நிகழ்ச்சிக்கு செல்லவில்லை ஆண்டனி வருகைக்காக ஒன்று சேர்ந்து செல்ல காத்திருந்தததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.2 அவரது சாட்சியத்தில் அ.சா.2, அ.சா.5 மற்றும் விபத்தில் இறந்துபோன ஆண்டனி ஆகியோர் நிகழ்ச்சிக்கு சென்று மூவரும் சாப்பிட்டு விட்டு வீட்டிற்கு கிளம்புவதற்காக வெளியே வந்த போது இறந்துபோன ஆண்டனி மட்டும் அவர்களிடம் சொல்லிவிட்டு ரோட்டை கடந்து சென்றபோது விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரணாக அமைந்துள்ளது. அ.சா.2 மற்றும் அ.சா.5 அவர்களது சாட்சியத்தில் விபத்து நடந்த இடமானது போக்குவரத்து அதிகம் உள்ள ரோடு என்பதாகவும் விபத்து நடந்த சமயம் இரவு நேரம் என்பதாகவும் சம்பவ இடத்தில் தெருவிளக்கு வெளிச்சம் எதுவுமில்லை என்பதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

19)அரசுத்தரப்பு வழக்கில் இறந்துபோன ஆண்டனி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ரோட்டை கடந்தபோது விபத்து ஏற்பட்டதாக உள்ள நிலையில் வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 இடதுபுறம் இருந்து வலதுபுறமாக தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றபோது ஒரு அரசு பேருந்து மோதிவிட்டதாக கூறியுள்ளார். அ.சா.5 விபத்தில் இறந்து போன அந்தோணி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி நடந்து வந்து ரோட்டை கடந்து தெற்கு வந்தபோது பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக முரண்பட்டு சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளதை பார்க்கும்போது அரசு தரப்பில் விபத்தானது எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி கடந்தபோது விபத்து ஏற்பட்டது என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபணம் செய்யப் படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20) மேலும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் 3 மற்றும் 5 ஆகியோர்கள் வழக்கு விபத்தில் இறந்துபோன ஆண்டனி என்பவருக்கு உறவினர் மற்றும் தெரிந்த நபர்களாக உள்ள நிலையில் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள தனிப்பட்ட நபர்களை ஏன் இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்து நிரூபிக்க அரசு தரப்பில் எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதற்கு போதுமான காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை. அ.சா.2 மற்றும் அ.சா.5ன் சாட்சியத்தின் மூலம் எதிரி

தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பேருந்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என்பது நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும் அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் சம்பவ நேரம் இரவு என்பதாகவும், அதிகவாகனங்கள் செல்லும் சாலை என்பதாகவும், சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் தெருவிளக்கு வெளிச்சம் எதுவும் இல்லை என்பதாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன ஆண்டனி என்பவர் தான் அதிக வாகனங்கள் செல்லும் இடத்தில் அஜாக்கிரதையாக ரோட்டை கடந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் போதுமான சாட்சி சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாத நிலையில் எதிரி மீதான குற்றச்சாட்டிலிருந்து எதிரியை விடுதலை செய்யலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21)முடிவில் எதிரி மீது இதச பிரிவுகள் 279,304(A)ன் கீழான குற்றச் சாட்டிலிருந்து குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

22)இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப் படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப் பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08 ம் நாளில் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.04.08 18:52:17 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 27.01.2026 | திரு.அலெக்சாண்டர் த/பெ. ஆண்டனி – புகார்தாரர் |
| அ.சா.2 | 27.01.2026 | திரு.ஜான்பால் த/பெ. சாமிதாஸ் – பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சி |
| அ.சா.3 | 27.01.2026 | திரு.பாபுரஞ்சித் த/பெ. ஜார்ஜ் ராஜேந்திரன் – பார்வை மகசர் சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.4 | 28.01.2026 | திரு.மயில்சாமி, உதவி ஆய்வாளர் – முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி |
| அ.சா.5 | 17.02.2026 | திரு.அம்ரோஸ், த/பெ.ஏசையன், – விபத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.6 | 09.03.2026 | திரு.சுப்புரத்தினம், காவல்ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 30.11.2017 | புகார் |
| அ.சா.ஆ.2/அ.சா.3 | 30.11.2017 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3/அ.சா.4 | 30.11.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4/அ.சா.6 | 30.11.2017 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 /அ.சா.6 | 30.11.2017 | இறந்து போன அந்தோணி என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.6 /அ.சா.6 | 30.11.2017 | ஓட்டுநர் பணி அமர்தல் கடிதம் |
| அ.சா.ஆ.7/அ.சா.6 | 30.11.2017 | டிரிப் சீட் |
| அ.சா.ஆ.8/அ.சா.6 | 01.12.2017 | TN 33 N 2587 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.9/அ.சா.6 | 29.11.2017 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.10/அ.சா.6 | 30.11.2017 | இறந்துபோன அந்தோணி என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை |

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்:</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருட்கள்:</u>** இல்லை.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.04.08 18:52:26 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**<u>குறிப்பு</u>**

1)எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டார்.

2)வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.

3)வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

4)வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

5) தீர்ப்பின் நகல் மேன்மைமிகு திருப்பூர், தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.